தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 79/ந/2024

நாள்.22.10.2024

திரு.N.ஜெகநாதன்
போடிநாயக்கனூர், தேனி மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி,
போடிநாயக்கனூர், தேனி மாவட்டம் – எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம், தேனி, நகராட்சி காலனி, 27–வது வார்டு, கதவு எண்.53/6, என்கிற முகவரியைச் சேர்ந்த திரு.N.ஜெகநாதன் என்பவரின் 09.05.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.05.2024 அன்று பெறப்பட்டு, 79/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தேனி மாவட்டம், தேனி, நகராட்சி காலனி, 27–வது வார்டு, கதவு எண்.53/6, என்கிற முகவரியைச் சேர்ந்த திரு.N.ஜெகநாதன் என்பவர் தமது 09.05.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"எனது தாயார் திருமதி.பழனியம்மாள் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் நகராட்சியில் துப்புரவுப் பணியாளராக பணிபுரிந்து 30.06.2018 அன்று ஓய்வு பெற்று தற்போது ஓய்வூதியம் பெற்று வருகிறார். எனது தாயாரின் சேமநலநிதி கணக்கினை முடித்து தொகை வழங்கியதில் 13 மாதங்களில் சேமநலநிதிக்கென பிடித்தம் செய்யப்பட்ட சந்தா மற்றும் கடன் திருப்புத்தொகை சேமநலநிதி கணக்கில் வரவெடுக்கப்படாமல் கணக்கு முடித்துக் கொடுக்கப்பட்டதை அறிந்த எனது தாயார் திருமதி.பழனியம்மாள் அவர்கள் இது தொடர்பாக விடுபட்ட சந்தா, கடன் திருப்புத்தொகை மற்றும் அதற்கான வட்டித்தொகை வழங்கிட வேண்டி 30.09.2019, 27.06.2023

மற்றும் 16.02.2024 ஆகிய தேதிகளில் எனது தாயார் போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு விண்ணப்பித்ததோடு பலமுறை அலுவலகம் சென்று நேரிலும் வேண்டினார். ஆனால் இதுநாள் வரை ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதித் தொகை மற்றும் அதற்குரிய வட்டித்தொகை எனது தாயாருக்கு கிடைக்கப்பெறவில்லை.

ஊதியப்பட்டியல் நகல், வட்டி கணக்கீட்டுப்படிவம் ஆகிய இப்பொருள் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பித்து விண்ணப்பித்த பின்னும் கடந்த மூன்று ஆண்டுகளாக இதுவரை எந்தவிதமான பதிலும் கிடைக்காமல் இருந்த நிலையில் இரண்டு மாதங்களுக்கு முன்பு ஆணையர் அவர்களின் கடிதம் கிடைக்கப்பெற்றது. மேற்படி கடிதத்தில் மூன்று மாதங்களுக்கான தொகை மட்டுமே சேமநலநிதிக் கணக்கில் சேர்க்கப்படாமல் உள்ளது. முந்தைய ஆவணங்களை சரிபார்த்து உரிய தகவல் தரப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் எவ்விதமான பதிலும் இல்லை. ஓய்வுபெற்று ஆறு ஆண்டுகளுக்குப் பின்னும் ஓய்வுபெற்ற பணியாளருக்கு நகராட்சி நிர்வாகம் மூலம் வழங்கப்படவேண்டிய பணப்பலன்களை முழுமையாக வழங்காமல் இவ்வாறு மெத்தனப்போக்குடன் இருப்பது மிகவும் கவலைக்குரிய, கண்டிக்கத்தக்க செயலாகும்.

தற்போது எனது தாயார் வயது முதிர்வின் காரணமாக நடமாட்டம் இல்லாமல் உள்ளார். எனவே எனது தாயாரின் சார்பாக நான் முறைமன்றத்தை அணுகியுள்ளேன். நடுவர் அவர்கள் துப்புரவுப்பணியாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்ற எனது தாயாரின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு சேமநல நிதிக்கணக்கில் வரவு வைக்கப்படாத 13 மாதங்களுக்குரிய சந்தா, கடன் திருப்புத்தொகை மற்றும் அதற்கான வட்டித்தொகையை நகராட்சி நிர்வாகத்திடமிருந்து பெற்றுத்தர பணிவுடன் வேண்டுகிறேன்.

மேலும் அரசுப் பணியாளராகிய தங்களுடைய கடமையை சரிவர நிறைவேற்றாத பிரிவு எழுத்தர், மேலாளர், மற்றும் ஆணையாளர் ஆகியோர் மீது தக்க நடவடிக்கை எடுத்து உரிய தண்டனை வழங்கிட கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 12.08.2024 நாளிட்ட கடிதம் மூலம் போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையாளர் கோரப்பட்டார்.

3. போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையாளர் தனது 29.08.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

போடிநாயக்கனூர் நகராட்சியில் தூய்மைப்பணியாளராக பணியாற்றி கடந்த 30.06.2018–ல் ஓய்வு பெற்ற திருமதி. நா.பழனியம்மாள் க/பெ. நாகேந்திரன் என்பவர் தனது விண்ணப்பத்தில் சில குறிப்பிட்ட வருடங்களில் சில குறிப்பிட்ட மாதங்களில் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதித் தொகைக்கு வட்டிக் கணக்கீடு செய்யும் பொழுது விடுபட்டுள்ளதாகவும் அதனை சரிபார்த்து உரிய வட்டித் தொகையினை வழங்கிடுமாறும் கோரியிருந்தார். மேற்படி மனு பரிசீலனை செய்யப்பட்டதில் மனுதாரர் குறிப்பிட்ட மாதங்களில் 2014–ம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கான சேமநலநிதித் தொகை மட்டுமே வட்டி கணக்கீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாமல் பதிவேட்டின்படி விடுபட்டு உள்ளதாகவும் முந்தைய கோப்புகளை சரிபார்த்து தகவல் வழங்கப்படும் எனவும் அறிவிப்பு வழங்கப்பட்டது. இந்நிலையில் தற்போது முந்தைய கோப்புகள் கண்டறியப்பட்டு விவரங்கள் சரிபார்க்கப்பட்டதில் இவ்வலுவலக அறிவிப்பில் குறிப்பிட்ட 2014–ம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களுக்கு பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதித் தொகை ரூ.3600/–க்கு (மாதம் ஒன்றுக்கு ரூ.1200/– வீதம்) உரிய வட்டி ரூ.2113/– கணக்கீடு செய்யப்பட்டு ஆணை பெற்றிட அனுமதித்து இவ்வலுவலக செயல்முறை ஆணை

ந.க.எண்.6603/2014/எச்1 நாள் 01.10.2019–ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டு மனுதாரருக்கு SBI வங்கி காசோலை எண்.311059 நாள்04.10.2019 மூலம் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்த விவரம் மனுதாரருக்கு 29.08.2024ம் தேதி தெரியப்படுத்தி உரிய அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி விடுப்பட்ட மாதங்களுக்கான சேமநலநிதி தொகை மற்றும் வட்டித்தொகை வழங்கப்பட்ட நிலையில் மீண்டும் தொகை வழங்க இயலாது என்ற விவரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையர் ஆகியோரை 26.09.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 09.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திருமதி.பழனியம்மாள் அவர்களின் சார்பாக அவரது மகன் திரு.ஜெகநாதன் என்பவர் 26.09.2024 ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

எனது தாயார் திருமதி.நா.பழனியம்மாள், தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 30.06.2018 அன்று ஓய்வுபெற்று தற்போது ஓய்வூதியம் பெற்று வருகிறார். தாயாரின் சேமநலநிதி கணக்கினை முடித்து தொகை வழங்கியதில் 13 மாதங்களில் சேமநல நிதிக்கென பிடித்தம் செய்யப்பட்ட சந்தா மற்றும் கடன் திருப்புத்தொகை சேமநலநிதி கணக்கில் வரவெடுக்கப்படாமல் கணக்கு முடித்துக் கொடுக்கப்பட்டதை அறிந்த எனது தாயார் பழனியம்மாள் இது தொடர்பாக விடுபட்ட சந்தா, கடன் திருப்புத்தொகை மற்றும் அதற்கான வட்டித்தொகை வழங்கிட வேண்டி 30.09.2019, 27.06.2023 மற்றும் 16.02.2024 ஆகிய தேதிகளில் போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு விண்ணப்பித்ததோடு, பலமுறை அலுவலகம் சென்று நேரிலும் வேண்டினார். ஆனால் கிடைக்கப்பெறவில்லை.

ஊதியப் பட்டியல் நகல், வட்டி கணக்கீட்டுப் படிவம் ஆகிய இப்பொருள் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பித்த பின்னரும் மூன்று ஆண்டுகளாக எந்தவித பதிலும் கிடைக்காமல் இருந்த நிலையில் இரண்டு மாதங்களுக்கு முன் மூன்று மாதங்களுக்கான தொகை மட்டுமே சேமநலநிதிக் கணக்கில் சேர்க்கப்படாமல் உள்ளது. முந்தைய ஆவணங்களை சரிபார்த்து உரிய தகவல் தரப்படும் என குறிப்பிட்டனர். ஓய்வு பெற்று ஆறு ஆண்டுகள் ஆகியும் எனக்கு கிடைக்கப்பட வேண்டிய பணப் பலன்களை முழுமையாக வழங்காமல் உள்ளனர். எனது தாயார் வயது முதிர்வின் காரணமாக நடமாட்டம் இல்லாமல் உள்ளார். எனவே எனது தாயாரின் சார்பாக நான் முறைமன்றத்தை அணுகியுள்ளேன். மேலும் எனது 09.05.2024 நாளிட்ட புகார் மனுவில் தெரிவித்துள்ளதை மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

நான் 26.09.2024 இன்று இம்முறைமன்ற நடுவத்தில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்ட எனது கோரிக்கைகளை சமர்ப்பிக்கிறேன்.

- எனது வயதான தாயாரின் உடல்நிலை சரியில்லாததால் நான் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி எனது வாக்குமூலத்தை சமர்ப்பிக்கிறேன்.

- எனது தாயார் ஓய்வு பெற்று ஆறு ஆண்டுகளுக்கு மேலாகியும் அவர்களுக்கு ஓய்வூதியப் பணப்பலன்கள் கிடைக்கப்பெறவில்லை. அதனை உடனடியாக கிடைக்க வழிவகை செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

- மேலும் அரசுப் பணியாளர்களாக தங்களது கடமையை சரிவர செய்யாத நகராட்சி நிர்வாக அலுவலர்கள், பணியாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க ஆவண செய்ய வேண்டுகிறேன்.

- தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் அடிப்படையில் எனது தாயாருக்கு கிடைக்க வேண்டிய சேமநலநிதி மற்றும் அதற்கான வட்டி தொகை வழங்கியதில் 13 மாதங்கள் விடுபட்டுள்ளது. இது சம்மந்தமான கோப்புகளை ஆய்வு செய்தவற்கு ஓய்வு பெற்ற ஒரு தணிக்கை அலுவலரை அழைத்து வந்து ஆய்வு செய்தவற்கு அனுமதிக்க பொது தகவல் அலுவலர் அவர்களுக்கு 29.02.2024 அன்று மனு செய்துள்ளார் எனது தாயார். அதன்படி பொது தகவல் அலுவலர் 03.02.2024, 28.03.2024 மற்றும் 02.04.2024, ஆகிய தேதிகளில் ஏதேனும் ஒரு தேதியில் பார்வையிட அனுமதி தந்தார். 28.03.2024 அன்று மனு செய்து எனது தாயார் தணிக்கையாளரிடம் கோப்புகளை ஆய்வு செய்ய வந்தபோது சில கோப்புகள் கிடைக்காத காரணத்தால் மற்றும் ஓர் தேதியில் பார்வையிட அனுமதி தருகிறோம் என்று திருப்பி அனுப்பி விட்டனர். அனுமதி கிடைக்காத காரணத்தால் 09.07.2024ம் தேதி பார்வையிட அனுமதி கேட்டு விண்ணப்பம் செய்ததற்கு பொது தகவல் அலுவலர்கள் தகவல் அறியும் உரிமைச்சட்டத்திற்கு மீண்டும் ரூ.10/– வில்லை ஒட்டி தகவல்களை பெற்றுக் கொள்ளவும் என முன்னுக்குப்பின் முரணாக பதில் தந்து கோப்புகளை ஆய்வு செய்ய இதுநாள் வரை அனுமதிக்கவில்லை. இதற்கும் சம்மந்தப்பட்ட பொது தகவல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுத்து நீதியும் நியாயமும் கிடைக்க வேண்டுகிறேன் என தெரிவித்துள்ளார்.

6) நகராட்சி ஆணையாளர் 26.09.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் மனு பரிசீலனை செய்யப்பட்டதில் மனுதாரர் குறிப்பிட்ட மாதங்களில் 2014–ம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கான சேமநலநிதித் தொகை மட்டுமே வட்டி கணக்கீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாமல் பதிவேட்டின் படி விடுபட்டு உள்ளதாகவும் முந்தைய கோப்புகளை சரிபார்த்து உரிய தகவல் வழங்கப்படும் எனவும் அறிவிப்பு வழங்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது முந்தைய கோப்புகள் கண்டறியப்பட்டு விவரங்கள் சரிபார்க்கப்பட்டதில் இவ்வலுவலக அறிவிப்பில் குறிப்பிட்ட 2014–ம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களுக்கு பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதித் தொகை ரூ.3600/–(மாதம் ஒன்றிற்கு ரூ.1200/– வீதம்) உரிய வட்டி ரூ.2113/– கணக்கீடு செய்யப்பட்டு அதனை பெற்றிட அனுமதித்து இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.6603/2014/எச்1, நாள் 01.10.2019–ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மனுதாரருக்கு SBI வங்கி காசோலை எண்.311059, நாள்04.10.2019 மூலம் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்த விவரம் மனுதாரருக்கு 29.08.2024 தேதி அன்று தெரியப்படுத்தி அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்கிற விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது 29.08.2024 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ள விவரங்களை மேல் வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக் கொள்கிறேன்.

முந்தைய கோப்புகள் கண்டறியப்பட்டு விவரங்கள் சரிபார்க்கப்பட்டதில் இவ்வலுவலக அறிவிப்பில் குறிப்பிட்ட 2014–ம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களுக்கு பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதித் தொகை ரூ.3600/–(மாதம் ஒன்றிற்கு ரூ.1200/– வீதம்) உரிய வட்டி ரூ.2113/– கணக்கீடு செய்யப்பட்டு அதனை பெற்றிட அனுமதித்து இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.6603/2014/எச்1, நாள் 01.10.2019–ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மனுதாரருக்கு SBI வங்கி காசோலை எண்.311059, நாள் 04.10.2019 மூலம் வழங்கப்பட்டுள்ளது. இதன் விவரம் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் கூறிய விவரமான Special Provident Fund கணக்கிற்கு படிவத்தில் குறிப்பிட்ட சில மாதங்களின் தொகை குறிப்பிடாமல் விடுபட்டுள்ள விவரங்களை முந்தைய கோப்புகளை மீண்டும் சரிபார்த்து மனுதாரின் கோரிக்கைக்கு 30 நாட்களுக்குள் முழுமையான தகவல் வழங்கப்படும். மேற்கண்ட அனைத்து விவரங்களையும் சரிபார்த்து வழங்க ஆணையம் போதிய கால அவகாசம் வழங்கும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக் கொள்கிறேன்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையரின் வாக்குமூலம், அறிக்கை மற்றும் ஆவணங்கள், ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தனது தாயார் திருமதி. பழனியம்மாள் அவர்களின் சேமநலநிதி கணக்கினை முடித்து தொகை வழங்கியதில் 13 மாதங்களில் சேமநலநிதிக்கென பிடித்தம் செய்யப்பட்ட சந்தா மற்றும் கடன் திருப்புத் தொகை சேமநலநிதி கணக்கில் வரவெடுக்கப்படாமல் கணக்கு முடிக்கப்பட்டதாகவும், பின்னர் ஆணையரது கடிதத்தில் மூன்று மாதங்களுக்கான தொகை மட்டுமே சேமநலநிதிக் கணக்கில் சேர்க்கப்படாமல் உள்ளது எனவும் முந்தைய ஆவணங்களை சரிபார்த்து உரிய தகவல் தரப்படும் என கூறி ஆறு ஆண்டுகளுக்கு பின்னும் ஓய்வுபெற்ற பணியாளருக்கு நகராட்சி நிர்வாகம் மூலம் வழங்கப்பட வேண்டிய பணப்பலன்களை முழுமையாக வழங்காமல் மெத்தனப்போக்குடன் செயல்படும் போடிநாயக்கனூர் நகராட்சியிடமிருந்து தனது தாயாருக்கு கிடைக்க வேண்டிய பணப்பலன்களை பெற்றுத் தரும்படி கோரியுள்ளார்.

- முந்தைய கோப்புகள் கண்டறியப்பட்டு விவரங்கள் சரிபார்க்கப்பட்டதில் இவ்வலுவலக அறிவிப்பில் குறிப்பிட்ட 2014–ம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களுக்கு பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதித் தொகை ரூ.3600/–(மாதம் ஒன்றிற்கு ரூ.1200/– வீதம்) உரிய வட்டி ரூ.2113/– கணக்கீடு செய்யப்பட்டு அதனை பெற்றிட அனுமதித்து இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.6603/2014/எச்1, நாள் 01.10.2019–ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மனுதாரருக்கு SBI வங்கி காசோலை எண்.311059, நாள் 04.10.2019 மூலம் வழங்கப்பட்டுள்ளது. இதன் விவரம் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மனுதாரர் கூறிய விவரமான Special Provident Fund கணக்கிற்கு படிவத்தில் குறிப்பிட்ட சில மாதங்களின் தொகை குறிப்பிடாமல் விடுபட்டுள்ள விவரங்களை முந்தைய கோப்புகளை மீண்டும் சரிபார்த்து மனுதாரின் கோரிக்கைக்கு 30 நாட்களுக்குள் முழுமையான தகவல் வழங்கப்படும்.

மேற்கண்ட சூழ்நிலையில் இந்நேர்வில் போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு மனுதாரர் கூறிய விவரமான Special Provident Fund கணக்கிற்கு படிவத்தில் குறிப்பிட்ட சில மாதங்களின் தொகை குறிப்பிடாமல் விடுபட்டுள்ள விவரங்களை முந்தைய கோப்புகளை மீண்டும் உடனடியாக சரிபார்த்து மனுதாரரின் கோரிக்கை

குறித்து 30 நாட்களுக்குள் உரிய நடவடிக்கை எடுத்து, அது குறித்த விவரத்தினை மனுதாருக்கு தெரிவிக்குமாறு போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தினை ஆணை பிறப்பித்த 15 நாட்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2024ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 22–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு. நா.ஜெகநாதன்,
27–வது வார்டு, கதவு எண்.53/6,
நகராட்சி காலனி,
போடிநாயக்கனூர்– 625 513.
தேனி மாவட்டம்.

2)நகராட்சி ஆணையர்,
போடிநாயக்கனூர் நகராட்சி,
போடிநாயக்கனூர்.
தேனி மாவட்டம்.

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4)ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/10/24

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)